# தந்தை பெரியார்



Scanned with CamScanner

# தந்தை பெரியார்

## பிறப்பும் - இளமைப் பருவமும்

தமிழகத்தின் ஈரோடு நகரில் வசித்து வந்தவர் வெங்கட்ட நாயக்கர். அவரது மனைவியின் பெயர் சின்னத்தாயம்மாள். அவர் ஆரம்பத்தில் ஏழ்மை நிலையில் இருந்து பின்னர் தன் கடும் உழைப்பால் செல்வநிலைக்கு உயர்ந்தார்.

தரகு வியாபாரம் செய்து வந்த வெங்கட்ட நாயக்கரிடம் ஏராளமான சொத்துக்கள் சேர்ந்தன. அவர் சிறந்த பக்திமானாகவும் திகழ்ந்தார். எனவே அவரது வீட்டில் சாதுக்களும், இறைவன் திருப்புகழைப் பாடுபவர்களும் நிறைந்து வழிந்தனர்.

வெகுநாட்கள் குழந்தைப் பேறில்லாத வெங்கட்ட நாயக்கர் - சின்னத்தாயம்மாள் தம்பதியினருக்கு 1877ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் நாள் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு கிருஷ்ணசாமி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

அதன் பிறகு 1879ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ராமசாமி என்று பெயர்சூட்டி மகிழ்ந்தனர். அக்குழந்தையே பின்னாளில் பகுத்தறிவுப் பகலவன் என்ற பெயருடன் பேரும் புகழும் பெற்றது. ராமசாமிக்குப் பிறகு பொன்னுத்தாய், கண்ணம்மாள் என்ற இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தனர்.

ராமசாமி சிறுவயதில் தன் பாட்டி வீட்டிலேயே வளர்ந்தான். ஆறு வயதானபோது ஈரோட்டிலுள்ள

Scanned with CamScan

திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டான். குறும்பிலும், விளையாட்டிலும் அதிக ஆர்வம் இருந்த ராமசாமிக்கு ஏனோ படிப்பில் மட்டும் ஆர்வம் இல்லை.

வெங்கட்ட நாயக்கர் குடும்பம் ஆச்சார குடும்பமாகவே திகழ்ந்தது. எனவே அவர் ஆச்சாரமான குடும்பத்தாருடன் மட்டுமே பழக வேண்டும் என்று குழந்தைகளுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

ஆனால் ராமசாமி அருகிலுள்ள கிறிஸ்தவர்கள், முஸ்லீம் இனத்தாரோடு பழகி, அவர்கள் வீட்டில் உணவும் வாங்கி உண்பான். அக்காலத்திலேயே சாதி, மத வேறுபாடு ராமசாமிக்குப் பிடிக்கவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள இயலும். ஒருநாள் பிற மதத்தினர் வீட்டில் உணவு உண்ணும் ராமசாமியைப் பற்றி அறிந்த வெங்கட்ட நாயக்கர் மகனை அடித்தார். கூடவே கையிலும் காலிலும் விலங்கும் பூட்டி விட்டார்கள். ராமசாமி விலங்கோடு பள்ளிக்குச் சென்றான்.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சில ஆண்டுகள் படித்த ராமசாமி, மேலும் சில ஆண்டுகள் ஆங்கிலப் பள்ளியிலும் படித்தான். ஆனால் படிப்பில் ஆர்வமில்லாத ராமசாமி படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டான்.

அதன் பிறகு தந்தையின் தரகு கடையிலேயே பணிபுரியச் சென்றுவிட்டான் ராமசாமி. அவனுக்கு வியாபாரத்தில் அதிக நாட்டம் இருந்தது.

## நாகம்மையோடு திருமணம்

வெங்கட்ட நாயக்கர் வீட்டில் எப்போதும் புராணக் கதைகள் அரங்கேறிக் கொண்டிருக்கும். பல ஆன்மிக வாதிகள் அங்கு வந்து சென்றனர். ராமசாமிக்கு அவர்களின் மீது ஆர்வம் உண்டாகவில்லை.

Scanned with CamScan

அவர், எப்போதும் உழைப்பையே நம்பினார். முயற்சியால் நமக்கு கிடைக்கும் வெற்றிக்கு கடவுளையோ, விதியையோ காரணம் சொல்ல வேண்டிய அவசியம் ஏன் என்று பிறரிடம் கேள்வி கேட்டார்.

அன்றாடம் கடைக்குச் செல்லும் ராமசாமி கடைக்கு வரும் பொருட்களை ஏலம் விட்டார். மூட்டைகளை முகவரிப்படி அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார். வியாபாரத்திலேயே கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார்.

ராமசாமிக்கு பத்தொன்பது வயதாகியது. அக்கால வழக்கப்படி அவருக்குத் திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர் விரும்பினர். அதன்படி நாகம்மை என்னும் பதிமூன்று வயது பெண்ணோடு ராமசாமிக்குத் திருமணம் நடைபெற்றது.

சிறுவயதிலேயே ராமசாமிக்கு அசைவ உணவு சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் ராமசாமியின் பெற்றோரோ, மனைவி நாகம்மையோ சைவ உணவு உண்பவர்கள். ஆனால் ராமசாமியின் விருப்பத்திற்கேற்ப நாகம்மையும் பின்னாளில் அசைவம் உண்ண ஆரம்பித்துவிட்டார்.

ராமசாமி எளிமையான முறையில் இல்வாழ்க்கையைத் தொடங்கினார். அவரது எளிமையும் சிக்கனமும் பலரும் அறிந்த ஒன்றாகும். திருமணம் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அத்தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அக்குழந்தை ஐந்தே மாதங்களில் இறந்துவிட்டது.

குழந்தையின் மறைவு ராமசாமியின் மனதை மிகவும் வருத்தம் கொள்ளச் செய்தது. மனைவி எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவரால் அதைத் தங்கிக் கொள்ள இயலவில்லை.

Scanned with CamScan

பெரியாரின் திறமையால் ஈரோடு நகரசபை பாதுகாப்புத் தலைவர் பதவி அவரைத் தேடி வந்தது. ராமசாமி அப்பொறுப்பை ஏற்றபின் ஈரோடு நகரம் சுத்தமும் சுகாதாரம் நிரம்பிய நகரமாக மாறியது.

அவ்வேளையில் சேலம் நகரசபைத் தலைவராகயிருந்த ராஜாஜி ராமசாமிக்குக் கடிதம் எழுதினார். ஈரோடு சுகாதார அதிகாரிகளை சேலம் நகருக்கும் அனுப்பி அங்கும் சுத்தம், சுகாதாரத்தை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொண்டார் என்றால் பெரியாரின் நிர்வாகத் திறமையை நாம் அறிந்து கொள்ள இயலும்.

ராமசாமியின் அறிவையும் ஆற்றலையும் புரிந்து கொண்டவர்கள் அவருக்கு கௌரவ நீதிபதி பொறுப்பு தந்தனர்.

ஈ.வெ.ராமசாமி ஈரோடு நகரசபைத் தலைவராகப் பொறுப்பேற்ற பின் காவிரி ஆற்றிலிருந்து ஈரோடு நகருக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தந்தார். நல்ல சாலைகளை ஏற்படுத்தினார்.

ஈ.வெ.ராமசாமியின் தந்தை வெங்கட்ட நாயக்கர் பொதுமக்களுக்குப் பலவகையில் உதவிகள் செய்து வந்தார். அவர் 1911ஆம் ஆண்டு மறைந்தார். ஈ.வெ.ராமசாமி தனது தந்தையின் மறைவிற்குப் பின் தந்தை பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவி, தந்தை செய்த தொண்டுகளைத் தொடர்ந்து செய்து வந்தார். தந்தையின் சொத்துக்கள் பலவற்றை அறக்கட்டளையின் பெயரில் எழுதி வைத்தார் அவர்.

இவ்வாறு இளம் வயதிலேயே பொதுமக்கள் நலனில் அக்கறையோடு செயல்பட்ட ஈ.வெ.ராமசாமியைப் 'பெரியார்' என்று அழைப்பது மிகப் பொருத்தமாகும்.

Scanned with CamScan

# வைக்கம் வீரர்

ஈ.வெ.ராமசாமிப் பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுத் தந்தது வைக்கத்தில் அவர் நடத்திய வெற்றிப் போராட்டமாகும்.

கேரளாவில் ஆலப்புழை நகருக்கு அருகிலுள்ள ஊர் வைக்கம் ஆகும். அங்குள்ள புகழ்பெற்ற ஆலயத்தினுள் தாழ்த்தப்பட்டோர் நுழையக் கூடாது என்று உயர்சாதியினர் கூறி வந்தனர். இக்கொடுமை பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. மாதவன் நாயர் என்னும் வழக்கறிஞர் இக்கொடுமையை எதிர்த்துப் போராடி வந்தார். திருவிதாங்கூர் மாநில காங்கிரஸ் தலைவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

Scanned with CamScan

## சுயமரியாதை இயக்கம்

பெரியார் கேரளாவில் ஆலய நுழைவுப் போராட்டத்தில் மகத்தான வெற்றி பெற்றாலும் தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் பலருக்கு பெரியாரின் செயல் பிடிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

“தமிழ்கக் காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான பெரியாருக்கு கேரளாவில் என்ன வேலை?” என்று அவர்கள் கேள்வி எழுப்பியதோடு, பெரியாரின் மீது குற்றமும் சாட்டினர்.

பெரியாரோ, “பொது வாழ்வு என்று வந்துவிட்டால் குறுகிய வட்டத்திற்குள் மட்டும் செயல்பட வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்தம் செய்ய முடியாது. அண்டை மாநிலத்தில்

Scanned with CamScan

## சமூகப் போராட்டங்கள்

பெரியார், மக்கள் மனதில் அடைந்து கிடந்த இருளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் அகற்றுவதற்காகவே சுயமரியாதை இயக்கத்தை நிறுவினார்.

குறிப்பாக மக்களிடையே உயர் சாதி, தாழ்த்தப்பட்டவர் என்ற பிரிவினை இருப்பதை பெரியார் வெறுத்தார். எனவே அவர், "என்று நம் நாட்டில் உயர்ந்த சாதிக் கொள்கை ஒழிகிறதோ, அன்றுதான் நாம் சுயாட்சி புரிவதற்கான தகுதியைப் பெறுவோம்" என்று பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தனது சுயமரியாதைக் கருத்துக்களை மக்களிடையே எடுத்துக்கூற 'குடிஅரசு' என்னும் பத்திரிகையைத் தொடங்கினார். கூடவே 'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையையும் அவர் தொடங்கினார். ஆனால் ரிவோல்ட் பத்திரிகை சிறிது காலத்திலேயே நின்று விட்டது.

பெரியார் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அவரது கருத்துக்களைக் கேட்ட இளைஞர்கள் ஆயிரக்கணக்கானோர் சுயமரியாதைக் கழகத்தில் இணைந்தனர்.

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர் அனைவரும் கறுப்பு சட்டை அணிய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார் பெரியார். அவரது கூட்டம் நடைபெற்ற இடங்களில் கறுஞ்சட்டை அணிந்த இளைஞர்கள் திரண்டு நின்றனர்.

பெரியாரின் மேடைப் பேச்சும் குடிஅரசு பத்திரிகையில் அவர் எழுதிய முற்போக்குக் கட்டுரைகளும்

Scanned with CamScan

## சீர்திருத்தவாதி

பெரியார் வெறும் கடவுள் மறுப்புக் கொள்கையில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை. அவர் பெண்ணுரிமை, விதவை மறுமணம், வரதட்சணை எதிர்ப்பு, தொழிலாளர் உரிமை உள்ளிட்ட சமூகச் சீர்திருத்தங்களிலும் ஈடுபடலானார்.

சாதி, சமயங்களை ஒழிக்க வேண்டுமெனில் இளைஞர்கள் வேற்றுச்சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். பெரியாரின் கருத்தை ஏற்று, அவரது தொண்டர்கள் பலர் சீர்திருத்த திருமணம் புரிந்தனர்.

Scanned with CamScan

# பெண்ணுரிமை போற்றியவர்

அக்காலத்தில் ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டால் அப்பெண் விதவையாக வாழ வேண்டும் என்ற நிலையே இருந்தது. ஆனால் பெரியார் விதவை மறுமணம் பற்றிப் பேசினார். பல விதவைப் பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்தார்.

அக்கால வழக்கப்படி பெரியாரின் தங்கை மகள் அம்மாயிக்கு பத்து வயதில் திருமணம் நடைபெற்றது. பதின்மூன்றே வயதான அவளது கணவன் திருமணம் முடிந்த இரண்டே மாதங்களில் நோயுற்று இறந்துவிட்டான். அம்மாயி விதவையாகிவிட்டாள். பெரியார் அம்மாயிக்கு மறுமணம் செய்து வைத்தார்.

ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு, தன் குடும்பத்தில் அதற்கு மாறாக நடப்பவர் அல்ல பெரியார் என்பதை உணர்ந்த தமிழக மக்களும் பிற தலைவர்களும் பெரியாரைப் போற்றிப் பாராட்டினர்.

Scanned with CamScan

# திராவிடர் கழகம்

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி மற்றும் நீதிக்கட்சி இரு அரசியல் கட்சிகளாகத் திகழ்ந்து வந்தன. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் அரசியல் கட்சி அல்ல. அதுவொரு சமூக சீர்திருத்த இயக்கமாகவே நடைபெற்று வந்தது.

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்த பலர் இரு கட்சிகளிலும் இருந்தனர். பலர் சுயமரியாதை இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றும்படி பெரியாரிடம் கேட்டுக் கொண்டனர். பெரியாரின் மக்கள் செல்வாக்கும், அவரது பின்னால் அணிவகுத்து நின்ற தொண்டர்களுமே அதற்குக் காரணமாகும்.

ஆனால் பெரியார் சுயமரியாதை இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்ற விரும்பவில்லை. சுயமரியாதை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பு அப்போது பெரியாரிடமே இருந்து வந்தது.

Scanned with CamScan

# இறுதிக் காலம்

பெரியார் தனது முதுமைக்காலத்திலும் சுயமரியாதை, சமூக சீர்திருத்தம், கடவுள் மறுப்புக் கருத்துக்களை எடுத்துரைத்தே வந்தார். அவர் பட்டம், பதவிகளை ஒருபோதும் விரும்பியதில்லை. எனவே அவர் இறுதிவரை தனது இயக்கத்தை சமூக சீர்திருத்த இயக்கமாகவே நடத்தி வந்தார்.

பெரியார் கடவுள் மறுப்புக் கொள்கையுடைவர். இருப்பினும் அவர் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களை இழிவாகப் பேசியதில்லை. கடவுள் மறுப்பை மட்டுமே பேசி வந்தார்.

கொள்கை அளவில் பெரியார் பல தலைவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதிலும் பிற தலைவர்களோடு நட்பும் மரியாதையும் கொண்டிருந்தார் அவர்.

பிற தலைவர்களைத் தன் தொண்டர்கள் யாரேனும் இழிவாகப் பேசினால் அதை அவர் ஆதரிக்கவில்லை. ராஜாஜி, திரு.வி.க, காமராஜர் உள்ளிட்ட பல காங்கிரஸ் தலைவர்களுடன் பெரியார் கொண்டிருந்த நட்பு இதற்குச் சான்றாகும்.

தன் வயதையொத்த தலைவர்களின் நற்கொள்கைகளை ஆதரித்நார். தன்னைவிட இளைய தலைவர்களுக்கு ஒத்துழைப்பு அளித்து நல்ல வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

1954ஆம் ஆண்டு காமராஜர் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அவர் குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டார். காமராஜர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் பெரியார், காமராஜருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார்.

Scanned with CamScan